[26th September 1961

SRI V. SUBBIAH : குறிப்பாக கிராமப் பகுதிகளிலே சலவைத் தொழிலாளர்களுக்கு "டோபி கானா" போன்றவைகள் அவசியம் கட்டிக் கொடுக்கவேண்டும். கிராமப் பகுதிகளில் இப்பொழுது தண்ணீர் இல்லாமல் அவர்களுக்கு இம்மாதிரி வசதிகள் இல்லாமல் இருக்கிறது. அவர்களுக்கு பணமாகக் கொடுப்பதைவிட, சாமான்களாக வாங்கிக்கொடுப்பது உதவிகரமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அவர்களுக்கு ரூபாய் கொடுக்காமல், சாமான்களாகத்தான் வாங்கிக்கொடுப்பதற்காக யோசித்துக் கொண்டிருக்கிறோம். பெரிய நகரங்களில் பஞ்சாயத்து போர்டுகள், நகரசபைகள் "டோபி கானா" கட்டுவதற்கு முன்வருகிறபொழுது, அவைகளைக் கவனித்து பரிசீலனை செய்து ஸ்தல ஸ்தாபன இலாகா மூலம் உதவி செய்துகொண்டுவருகிறோம்.

9 a.m. **SRI K. B. S. MANI** : ஸார், இப்பொழுது மிகச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிற சலவை, க்ஷவரத் தொழிலாளிகளுக்கு அரசாங்கம் உதவி செய்தாலும், அவர்கள், முக்கியமாக சலவைத் தொழிலாளிகள், டோபி கானாக்கள் இல்லாத காரணத்தால், ஒவ்வொரு தாலுகா ஹெட்க்வார்ட்டர்ஸிலும், கிராமங்களிலும், துணிகளைத் துவைக்க அவர்கள் மிக்க கஷ்டப்படுகிறார்கள் ; வெகு தூரம் துணிகளைச் சுமந்து செல்ல வேண்டியிருக்கிறது. கோடை காலத்தில் தஞ்சாவூர் ஜில்லா போன்ற பகுதிகளில் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, ஒவ்வொருப் பஞ்சாயத்திலும் டோபி கானாக்கள் அமைக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN: அந்தந்த கிராமங்களில் உள்ள நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கென்றுதான் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் டோபி கானாக்கள் அமைக்க முன்வந்தால், அவர்கள் நல்ல நன்மைகளை அடைவார்கள்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஸார், அமைச்சர் தன் பதிலில் எண்ணிக்கைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால், அவர்களுக்கு உதவிக்காகக் கொடுக்கும் தொகை மிகமிகக் குறைவாக இருக்கிறது ; அதனால், வாங்கிக் கொடுக்கும் கருவிகள் அதிகமாக இருக்கவில்லை. எல்லா ஜில்லாக்களிலும், அதிகப்பட்ட நபர்களுக்கும், அதிகமான தொகையையும் கொடுக்க அடுத்த ஆண்டிலாவது வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அடுத்த ஆண்டில் என்று சொல்கிறார்கள் ; அடுத்த ஆண்டு வரை காத்திருக்கமாட்டோம். இந்த ஆண்டே செய்யலாம். எல்லா ஜில்லாவிலும்தான் உதவிகள் அளிக்கப்படுகின்றன. முதலில் சேலத்தில் பரீட்சார்த்தமாகச் செய்தோம், அது திருப்தி அளிக்கவில்லை. ஒவ்வொரு ஜில்லாவிலும் 100 பேருக்கு சாமான்கள் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு இருக்கிறது.

SRI A. A. RASHEED : ஐயா, நாவிதர்களுக்கு பயிற்சி சாலை ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

Cement (adulteration)

* **1841 Q.—SRI V. K. KOTHANDARAMAN** : கனம் பொதுமராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில், சிமெண்டில் கலப்படம் செய்வதாக ஏதேனும் புகார்கள் வந்தனவா ?

(இ) என்னென்ன விதமான கலப்படம் ?

(உ) இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது ?

26th September 1961]

THE HON. SRI P. KAKKAN : (a) No, Sir.

(b) Does not arise.

(c) With a view to prevent such nefarious activities in future, provision is being made in sub-clause (viii) under clause 7 of the draft of the Madras State Cement Control Order, prohibiting any person from adulterating cement with any other foreign matter for the purpose of sale or for valuable consideration.

SRI R. SRINIVASA IYER : ஸார், இந்த சிமெண்ட் வியாபாரத்தில், கலப்படம் செய்வது மட்டுமல்லாமல், ஒரு ஸ்டாக்கிஸ்ட் என்று வைத்திருப்பதால், அவர்கள் தாளுக விற்கவேண்டிய சிமெண்டைப் பதுக்கி ஏராளமான கலப்படம் செய்து, அதிகவிலைக்கு விற்கிருர்கள். இதிலெல்லாம் ப்ளாக் மார்க்கெட் நடக்கிறதே, அதைத் தடுக்க ஜாஸ்தியான ஸ்டாக்கிஸ்டுகளே நியமித்தால், போட்டியின் காரணமாக ப்ளாக் மார்க்கெட்டு இல்லாமல் இருக்கும் என்பதால், அதற்கான ஸ்டெப்புகள் எடுக்கப்படுமா ?

THE HON SRI P. KAKKAN : ப்ளாக் மார்க்கெட்டு செய்தால் அதற்கு தண்டனை உண்டு என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது. ஏதாவது திருட்டுத்தனமாக நடப்பதை அங்கத்தினர் தெரிவித்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதிகமான ஸ்டாக் ஹோல்டர்கள் ஏற்படுத்துவதுபற்றித் தனிக் கேள்வி போடவேண்டும். தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்லுகிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், மூன்றுவது ஐந்தாண்டுத், திட்டத்தில் பல திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன ; அது கட்டடமோ டாமோ பல ஏதோ, அதில் கலப்பட சிமெண்டை உபயோகித்தால், 100 வருஷம் இருக்கக்கூடிய கட்டடம் ஐந்து வருஷம்கூட இருக்காது. அப்படிப் பட்ட நிலைமை ஏற்பட்டால், சர்க்கார்தான் பொது மக்கள்தான் பாதிக்கப் படும் நிலைமை ஏற்படும். ஆகவே, அவற்றைத் தடுக்க திட்டம் வகுக்கப் படுகிறது என்று சொல்வது ஒரு பக்கம் இருந்தாலும், ரொம்ப ரொம்ப முக்கியமான இந்த விஷயத்தில், மிகமிகக் கடுமையான நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்களே ஏதாவது குறிப்பிட்ட கேஸைப் பற்றிச் சொன்னுல் நடவடிக்கை எடுக்கலாம். பொதுவாக இந்த மாதிரிப் பேசுவது நல்லதல்ல இந்த சபையில் என்றுதான் சொல்லுகிறேன். முன்பே பதிலில் குறிப்பிட்டது போல தகுந்த நடவடிக்கை எடுக்கத்தான் செய்கிறோம்.

SRI M. KALYANASUNDARAM : ஸார், இவ்வாறு கலப்படம் நடைபெறுவதை, குறிப்பாக சேலம் ஜில்லாவில் இன்ன இன்ன முறைகளில், இன்னின்ன இடங்களில் நடைபெறுகின்றன என்று போலீஸ் அதிகாரிகளிடம் எழுத்து மூலமும், நேரிலும் நான் சொல்லியிருக்கிறேன். ஆனுல், போலீசார் நடவடிக்கை எடுக்க சட்டம் இடம் தரவில்லை என்று சொல்லுகிருர்கள். அவசியமானுல், சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும். கலப்படப் பொருள்கள், மாக்கல், மற்றக் கல்கள் இவற்றை துகள் செய்து அந்த மண்ணைக் கலவை செய்கிருர்கள். இன்றைக்குப் பழைய சிமெண்டு சாக்கு எட்டு அணு விற்கிறது ; முன்பெல்லாம் அது இரண்டு அணுவுக்குப் போகாது. அப்பேர்ப்பட்ட இடங்களை போலீசார் மதுவிலக்கு சட்டத்தின்கீழ் ரெய்டு செய்வதுபோல் ஸ்பெஷல் போலீஸ் பார்ட்டி ஏற்பாடு செய்து, சோதனை செய்யவும், அப்படிச் செய்பவர்களின் மோட்டார் லைசென்ஸ்களை ரத்து செய்யவும் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கலப்படம் எங்கே நடந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி எழுத்து மூலம் என்னிடம் கொடுத்தால், எந்த போலீஸ்காரர், கான்ஸ்டபிள், சப்-இன்ஸ்பெக்டர் அப்படிச் சொன்னுர்கள் என்று விசாரிக்க முடியும்.

[26th September 1961

Sri M. D. THIAGARAJA PILLAI : இப்பொழுது தெரிவிக்கப்பட்ட குறைகளை நீக்க, கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு விற்பனை செய்ய அனுமதி கொடுத்தால், நலமாக இருக்கும். அவ்வாறு செய்ய ஏற்பாடு செய்வார் களா ?

The Hon. Sri P. KAKKAN : கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குக் கொடுப்பது பற்றிய தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

Sri M. KALYANASUNDARAM : கலப்படத்தைத் தடுப்பதில் வெற்றி காண வேண்டுமானால், வினியோக முறையை மாற்ற வேண்டும். வினி யோகஸ்தர்களை நியமிப்பதில், சிமெண்ட் கம்பெனிக்காரர்களையே நியமித் தால், தொடர்ந்து இம்மாதிரியேதான் நடக்கும். ஆகவே, அரசாங்கம், கூட்டுறவு ஸ்தாபனங்களை வினியோகஸ்தர்களாக அங்கீகரிக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

The Hon. Sri P. KAKKAN : தனிக் கேள்வி போடவேண்டும்.

Sri S. M. ANNAMALAI : சிமெண்ட்டில் கலப்படம் செய்வதற்குப் பதிலாக, சிமெண்ட் மூட்டையை தூக்கிப்போடும்போது இரண்டு படி செமண்ட் கீழே கிடைக்கிறது. அதை அவர்களே உபயோகிக்கிறார்கள். ஆகவே, மூட்டையில் சிமெண்ட் அளவில் குறையாமல் இருக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

The Hon. Sri P. KAKKAN : அளவு குறையக் கூடாது என்பதுதான் சர்க்காரின் எண்ணமும். அப்படிக் கீழே மூட்டைகள் விழும்போது சிமெண்ட் குறைந்தால், அதில் நாம் ஒன்றும் செய்வதற்கில்லை.

Sri V. SUBBIAH : சிமெண்டு ஒரு மூட்டை, இரண்டு மூட்டை வேண்டுமென்பவர்கள் இன்றைக்கு ரூ. 14 வீதம் கொடுத்துக் கள்ள மார்க்கெட்டில்வாங்க வேண்டியிருக்கிறது. இந்த நிலையைப் போக்க, தாசில்தார்கள் லைசென்சுகளை வழங்குவதற்குப் பதிலாக, கிராமப் பஞ் சாயத்துக்களில், கிராமத்திற்கு வேண்டிய சிமெண்டுகளை அளிக்க . . .

DEPUTY SPEAKER : The hon. Member may put a separate question.

Tax on railway passenger fares (merger with railway fares)

*1842 *Q.*—Sri S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ரயில்வே டிக்கட் கட்டணத்துடன் பிரயாணவரி இணைப்பு செய்ததால் நம் மாநிலத்தின் வருவாய் குறையுமென்று மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் ஆட்சேபணை தெரிவித்துள்ளார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : No, Sir.

Sri S. M. ANNAMALAI : இந்த டிக்கட் கட்டணத்துடன் பிர யாண வரியைச் சேர்ப்பது பற்றி, மத்திய சர்க்கார் மாநில சர்க்காரை ஆலோசனை கேட்டார்களா ? அது விஷயமாக மாநில சர்க்கார் பரிசீலனை செய்தார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இல்லை, இந்த சர்க்காரை கலந்தாலோசிக்கவில்லை.

Flood Relief Fund

*1843 *Q.*—Sri T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state the total amount which has been donated so far to Sri Kamaraj Flood Relief Fund?